மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

**முன்னிலை: திருமதி.,A. சீதாலெட்சுமி., M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05-ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் வைகாசி 23-ம் நாள்

**இடைநிலை மனு எண்.414/2023-ல்**

**அசல் வழக்கு எண். 91/2021**

ராணி ...மனுதாரர்/வாதி

// **எதிர்**//

ராஜேஷ் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. ஜீவானந்தம், பி.ஏ., பி.எல்., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜயன், பி.ஏ., பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பு கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி கட்டளை 7 விதி 14 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி அசல் வழக்கானது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 31.05.2006-ம் தேதி முதல் வழக்கு சொத்து மனுதாரரின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்கு சொத்து மனுதாரர் புஞ்சை பயிர் சாகுபடி செய்து அனுபவித்து வருகிறேன். வழக்கு சொத்தில் சுமார் 30 வருடத்திற்கு மேற்பட்ட 25 தென்னை மரங்கள் மனுதாரரின் பராமரிப்பிலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது. மேலும், வழக்கு சொத்தில் சேராத ஆலங்கோட்டை கிராமத்திலுள்ள புல எண்.221 ஏ/9 பி-லுள்ள சொத்தையும் ஏற்கனவே

மனுதாரர் மாமனார் கிரய ஒப்பந்தம் மூலம் அனுபவித்து வந்தார். மனுதாரரின் மாமனாருக்கு பிற்பாடு வாரிசு முறையில் மனுதாரர் அனுபவத்தில் இருந்து வந்துள்ளது. ஏற்கனவே ஏற்பட்ட கிரய ஒப்பந்தத்தை அனுசரித்து புல எண்.221 ஏ/9 பி-லுள்ள சொத்தை அதன் முந்தைய உரிமையாளரான செல்வராசு என்பவர் மனுதாரரின் மகன் பெயரில் கடந்த 22.07.2020 தேதியில் கிரயம் செய்து கொடுத்துள்ளார்.

மேலும், வழக்கு சொத்தை மனுதாரரின் மாமனாருக்கு எதிர்வாதி தரப்பில் எழுதிக்கொடுத்துள்ள கிரய ஒப்பந்தத்தை அனுசரித்து மனுதாரருக்கு கிரயம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டு ஆலங்கோட்டை கிராம பஞ்சாயத்தார் முன்பாக எதிர்வாதியும் அவரது தாயாரும் ஒப்புக் கொண்டு எழுதிக் கொடுத்துள்ளார்கள். அந்த விபரம் ஆலங்கோட்டை கிராம கமிட்டி மினிட் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களின் விபரம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பிற்பாடு தான் மனுதாரருக்கு வழக்கில் அவரது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்ய வேண்டுமென்ற அவசியத்தை தெரிந்து கொண்டதாகவும் கூறியுள்ளார். எனவே, மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பு கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். மனுதாரர் உரிய காலத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு வழக்கில் எதிர்மனுதாரருக்கு யாதொரு பரிகாரமும் கிடைக்ககூடாது என்ற எண்ணத்திலும், வழக்கை காலதாமதப்படுத்தி வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்ற நோக்கத்திலும் ஆவணங்களை ஏற்றுக் கொள்ள கோரி மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் மனுதாரராதல் மோசடியாக பெறப்பட்ட ஆவணங்கள் ஆகும். மேற்படி மனுதாரர் வழக்கில் விடுபட்ட இடங்களை பூர்த்தி செய்வதற்கு இதுபோன்ற இடைமனுக்களை தாக்கல் செய்து எதிர்மனுதாரருக்கு ஏதேனும் ஓர் பாதிப்பினை ஏற்படுத்த வேண்டும் என்ற வகையில் மனுதாரர் மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**5. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

6. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**7.** இம்மனுவினை பரிசீலிக்கும்போது, மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணமானது அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்றும் மேற்படி ஆவணத்தினை கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்துக்கொண்டு அசல் வழக்கை மேல் நடத்தவேண்டும் என்று மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தாக்கல் செய்ய முனைந்துள்ள ஆவணங்களான இவ்வழக்கின் தன்மையை தீர்மானிக்க உதவுமா என்பதை வழக்கு விசாரணையின் முடிவில் மட்டுமே தீர்வுகாண இயலும். மேலும், எதிர்மனுதாரருக்கு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணத்தினைப் பொறுத்து PW.1-ஐ மேற்படி ஆவணத்தின் தன்மை குறித்து குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பு உள்ளது என்பதாலும், இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024-ம் ஆண்டு ஜுன் மாதம் 05-ம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

**(ஒம்/-A.சீதாலெட்சுமி),**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

**இரு தரப்பிலும்** : இல்லை

**( ஒம்/-A.சீதாலெட்சுமி),**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.